# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.2/2023

PW1– ராஜேந்திரன் நாள்.23.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

நகை கடை நடத்துவதற்கு 1ம் பிரதிவாதி அவருடைய தனிப்பட்ட பெயரில் GST பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. அவர் தனிப்பட்ட முறையில் GST பதிவு செய்து தனிப்பட்ட முறையில் வரி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. பி அட்டவணை சொத்தில் 1ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் முதலீடு செய்து கடையை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. நகை கடையை என்அப்பா ஆரமித்து நடத்தி வந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்அப்பா பெயரில் கடை ஆரமித்து அவர் நடத்தி வந்தார் என்பதற்கு நீதிமன்றத்தில் எழுத்துபூர்வமான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்அப்பா நகை கடை நடத்தி வந்து அதன்மூலம் வருமானம் பெற்றுவந்தார் என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி என்அப்பாவிற்கு துணையாக நகை கடையில் வேலைசெய்துவந்தார் என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கடை நடத்தி வரும்போது 2ம் பிரதிவாதி அவருக்கு துணையாக, உதவியாக இருந்தார் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி சரவணன் தனது பெயரில் தனியாக நகை கடை தொழில் ஆரமித்து நடத்திவந்தார் என்றால் சரியல்ல. சரவணா ஜீவல்லரி என்ற பெயரில் சரவணன் நகைகடை வந்தார் என்றால் நடத்தி வந்தார். அதை ராமச்சந்திரன் வைத்துக்கொடுத்தார். நான்கூறுவது போன்று ராமச்சந்திரன் மேற்படி கடையை வைத்துக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சரவணன் வங்கிக்கு நகைமதிப்பீட்டளராக வேலைக்கு சென்றார் என்றால் சரிதான். அதற்கு கமிசன் மூலம் அவருக்கு வருமானம் வருகிறது என்றால் சரிதான். அவர் தனியாக இடம் வாங்கி வீடு கட்டியுள்ளார். அந்த சொத்தை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை. சாட்சி தானாக 1994க்கு பின்னர் வாங்கியதால் சேர்க்கவில்லை என்று கூறுகிறார். நான் 2006ம் ஆண்டு

ஓய்வுபெற்றேன். ஓய்வுபெறும்போது சுமார் ரூ.50லட்சம் ஓய்வூதிய பலனாக வாங்கினேன் என்றால் சுமார் ரூ.10 லட்சம் வாங்கினேன். என் மனைவி பரமசிவம் என்பவரிடம் பவர்பத்திரம் 01.08.2006ம் தேதி எழுதிவாங்கினார். பரமசிவத்திடம் கிரையம் வாங்குவதற்கு பதிலாக என்மனைவி பெயரில் பவர்பத்திரம் எழுதிவாங்கினேன் என்றால் அவர் குடும்ப நண்பர் நம்பிக்கையின் பேரில் எழுதி வாங்கப்பட்டது. அந்த சொத்தை என்மகன் வினோத் பெயரில் 03.10.2007ல் ஒரு கிரயப்பத்திரம் என்மனைவி எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் சம்பாதித்த பணத்தை வைத்து என்பெயரிலும், என்மனைவி பெயரிலும் மற்றும் என்மகன் பெயரிலும் தனித்தனியாக சொத்துக்களை வாங்கி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். சாட்சி தானாக அது 1994ம் ஆண்டிற்கு பின்பு வாங்கப்பட்டது என்று கூறுகிறார். இந்த வழக்கு தாக்கல் செய்த காலத்திலும், அதற்கு பின்பும் சொத்துக்கள் கூட்டுக்குடும்ப அந்தஸ்து என்பது எங்கள் குடும்பத்தில் கிடையாது என்றால் சரியல்ல. வாதி, 1, 2 பிரதிவாதிகள் தனித்தனியாக அவர்கள் பெயரில் சொத்துக்கள் வாங்கி அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்தில் எனக்கோ, 2ம் பிரதிவாதிக்கோ, வேறு பிரதிவாதிக்கோ எந்த உரிமையும் கிடையாது என்றும், அது 1ம்பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட மேற்படி சொத்தை அவர் இறந்தபின்னர் அவருடைய வாரிசுகளான 6 முதல் 9 பிரதிவாதிகள் தனிசொத்தாக அடைந்து அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியை தொந்தரவு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் நீதிமன்ற ஆணையரை அழைத்து சென்றுள்ளேன் என்றால் சரியல்ல. 8வது இன சொத்து சர்வே எண்.430/1ல் உள்ளது 30.07.1983ம் தேதி 1ம் பிரதிவாதியிடமிருந்து என்மனைவி கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. என்அப்பா எழுதி வாங்கினார். என்னிடம் காட்டப்படுவது மேற்படி கிரய ஆவணத்தின் நகலாகும். அது **பி.வா.சா.ஆ.5**, மீண்டும் என்மனைவி ராமச்சந்திரன் பெயருக்கு அதே சொத்தை பொறுத்து

10.07.1986ம் தேதி கிரயபத்திரம் எழுதிகொடுத்தார் என்றால் சரிதான். அந்த கிரயபத்திரம் நகல் என்னிடம் காட்டப்படுவதாகும். அது **பி.வா.சா.ஆ6**, என்அப்பா சொன்னதால் எழுதிகொடுத்தார். என்அப்பா சொல்லி அவ்வாறு எழுதிகொடுக்கவில்லை என்றும், சொத்தை விற்று பணத்தை எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் மேற்படி சொத்தை கிரயம்பெற்றதால் தான் என்னுடைய ஆலோசனையின் படி என்மனைவி அவருக்கு கிரயபத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பிராதில் 4அயிட்ட சொத்தான சர்வேஎண்.201/2பி1ல் உள்ள சொத்தை நான், ராமச்சந்திரன், சரவணன் மற்றும் என் சகோதரிகள் ஆகியோர்கள் 18.11.2000ம் தேதியில் மனோகரன் என்பவர் பெயருக்கு ஒரு பொதுஅதிகார பத்திரம் என்ற பெயரில் கிரயம் ஆவணம் எழுதிகொடுத்தோம் என்றால் சரியல்ல. அதில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். நம்பிக்கையின் பேரில் எழுதிகொடுக்கப்பட்டது. மேற்படி அதிகார ஆவணத்தை பதிவாளர் எங்களிடம் சரிபார்த்து கேட்டு நாங்கள் ஒப்புக்கொண்ட பின்னர்தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் என்மகனும் கையெழுத்து செய்தான். வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள விவரங்களை முழுமையாக தெரிந்துகொண்டு தான் நானும், என்மகனும் கையெழுத்து செய்துகொடுத்தோம் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.8 ஆவணத்தில் சொத்துவிவரத்தில் நான்கு எல்லையில் கமலாவதி நிலத்திற்கு கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கமலாவதி நிலத்திற்கும் சோலைமுத்து கவுண்டர் வகையறா நிலத்திற்கும் மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நிருபணவாக்குமூலத்தில் 6, 7 வது ஆவணங்களானது 7, 8 இன சொத்துக்களை கிரயம் வாங்கியது என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஏற்பட்ட தேதியில் 1ம் பிரதிவாதியின் மனைவியான 6ம் பிரதிவாதி மனோகரன் பெயருக்கு பொதுஅதிகார பத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 5வது இன சொத்தை 5ம் பிரதிவாதியான சுப்புலட்சுமியிமிருந்து 6ம் பிரதிவாதி கிரயம் வாங்கினார் என்றால்

சரியல்ல. அந்த சொத்தை தன்னுடைய தனிப்பட்ட சொத்தாக 6ம் பிரதிவாதி மனோகரன் பெயருக்கு பவர்பத்திரம் எழுதிகொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. நான்கூறுவது போன்று குடும்பத்திற்காக சொத்தை வாங்குவதாக இருந்திருந்தால் என்தாயரிடம் இருந்து 6ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி தர வேண்டிய அவசியம் இல்லை என்றும், என்தாயார் பெயரிலேயே இருந்திருக்கலாம் என்றால் சரியல்ல. குடும்ப சொத்தாக இருந்தால் என்தந்தை பெயரில் கிரயம் பெற்றிருக்கவேண்டும் என்றும், 1ம் பிரதிவாதி பெயரில் கிரயம் வாங்க வேண்டிய அவசியம் இல்லையென்றும், 1ம் பிரதிவாதி தனிப்பட்ட சொத்தாக கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மற்றும் 6ம் பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்களை அவர்களுடைய தனிப்பட்ட சொத்துக்களாக அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. 10வது இன சொத்தை ராமச்சந்திரனும், கமலாவதியும் அவர்களுடைய வருமானத்தை கொண்டு தனிப்பட்ட சொத்தாக கிரயம் வாங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் தனிப்பட்ட முறையில் LICயில் கடன் பெற்று வீடு கட்டியுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதில் வீடு உள்ளது. அதை தனிப்பட்ட முறையில் கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. பொதுபணத்தில் கட்டப்பட்டது. கமலாவதி பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் அவருடைய தனிப்பட்ட சொத்துகள் என்பதால் தான் தனிப்பட் முறையில் பவர்பத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 4வது அயிட்ட சொத்தை பொறுத்து பொதுகுடும்ப சொத்து என்பதால் அனைத்து குடும்ப உறுப்பினர்களும் கையெழுத்து செய்துள்ளோம் என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் கையெழுத்து செய்தேன். பவர்பத்திரத்தில் 9 ஏக்கர் என்று குறிப்பிடப்படவில்லை என்றும், 9ஏக்கரை பொறுத்து ஆவணம் எழுதப்பட்டுள்ளதாக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 11 முதல் 21 இன சொத்துக்கள் தாத்தையங்கார்பேட்டையில் உள்ளவை ஆதியில் என்மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். ராமச்சந்திரன் தனிப்பட்ட முறையில் கிரயம் வாங்கியதால் தான் மருமகன் என்ற நிலைமையில் உள்ளபோது என்பெயருக்கு ஆவணம் எழுதிதரவில்லை

என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை ராமச்சந்திரன் 10, 11 பிரதிவாதிகளுக்கு கிரயம் பெற்றவிவரம் பின்னிட்டு எனக்கு தெரியும். ராமச்சந்திரன் மற்றும் கமலாவதி கிரயம் கொடுக்கும் காலத்திலேயே அந்தவிவரம் எனக்கு தெரியும் என்றும், அது அவர்களுடைய தனிப்பட்ட சொத்து என்பதால் அதுகுறித்து நான் அப்போது ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா 22 வது இன சொத்து விற்கப்பட்டு விட்டது என்றால் சரிதான். அது கமலாவதி எழுதி கொடுத்த பவர்பத்திரத்தில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. மனோகரன் பெயருக்கு பவர்பத்திரம் எழுதிகொடுக்கும்போதே ஒரு பஞ்சாயத்து நடந்தது என்றால் சரியல்ல. அந்த பஞ்சாயத்தில் 2, 3வது இனசொத்தில் எனக்கு தென்புறத்தில் 3ல் 1பாகமும், நடுபகுதியை ராமச்சந்திரன் பாகத்திற்கும், வடபகுதியை சரவணன் பாகத்திற்கும் ஒதுக்கி வாய்மொழியாக பிரித்துகொண்டோம் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் பாகம் பிரிக்க பட வேண்டிய கூட்டுக்குடும்ப சொத்துக்கள் கிடையாது என்றும், கூட்டுக்குடும்ப அந்தஸ்தும் கிடையாது என்றால் சரியல்ல. என்மகன் பெயரில் பிரியம் மருத்துவமனை அருகில் வாங்கிய இடத்தில் வீடு உள்ளது. தாவா 8, 9 இன சொத்துகள் முறையே ராமச்சந்திரன் மற்றும் கமலாவதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. நான் பிராதில் கோரியுள்ள படி எனக்கு தாவா சொத்துக்களில் பாகம் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. ராமச்சந்திரன் மற்றும் கமலாவதி பெயரில் வாங்கிய சொத்துக்களை எந்த காலத்திலும் கூட்டுக்குடும்ப சொத்துக்களாக அனுபவம் செய்து வரவில்லை என்றால் சரியல்ல. 2 முதல் 5 பிரதிவாதிகள் 09.11.2015ம் தேதி எழுதிகொடுத்த கிரய ஆவணம் முழு சம்மதத்துடன் தான் ஏற்படுத்தி கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. பஞ்சாயத்தில் ஏற்பட்டபாகத்தின் படி அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை பொறுத்து நான்கெல்லைகள் குறிப்பிட்டு அவர்கள் சட்டப்படியாக ஆவணம் எழுதிகொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த அடிப்படையில் தான் எனக்குரிய பாகத்திற்கு நான் பட்டா வாங்கினேன் என்றால் சரியல்ல. மு.வ.எண்.77/2019ல் கண்ட சொத்துக்களுக்கு கூட்டுப்பட்டா இல்லை. ரெங்கராஜ் மற்றும் என்பெயரில் பட்டா உள்ளது. அந்த பட்டாவை நான் தாக்கல் செய்துள்ளேன். அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த பகுதிக்கு என்பெயரில் பட்டா வாங்கினேன் என்றால் நான் எந்த பகுதிக்கும் வாங்கவில்லை. எந்த பகுதிக்கு என்பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் 1ம் இனபகுதிக்கு என்பெயரிலும், 2ம் இனபகுதிக்கு பக்கத்து வீட்டுக்காரர் பெயரிலும் பட்டா ஏற்பட்டுள்ளது. நான் முழுமையான உரிமையாளர் என்ற அடிப்படையில் என்பாகத்திற்கு கிடைத்த 1வது இன

சொத்திற்கு என்பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மீதி கிரயம் வாங்கிய பகுதிக்கு 6 முதல் 9 பிரதிவாதிகள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 09.11.2015ம் தேதி எழுதப்பட்ட ஆவணம் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் என்றால் சரியல்ல. 2 முதல் 5 பிரதிவாதிகளிடம் கிரயம் பெற்ற சொத்தில் 6 முதல் 9 பிரதிவாதிகள் முறையாக அனுமதி பெற்று கட்டிடம் கட்டியுள்ளார்கள் என்றும் அவர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவர்கள் சட்டப்படி கிரயம் வாங்கிய இடத்திற்கு பட்டா வழங்க கூடாது என்று நான் பரிகாரம் கோரஇயலாது என்றால் சரியல்ல. 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு உரிமையுள்ள சொத்துக்களை பொறுத்து அவர்கள் யாருக்கும் கிரையம் கொடுப்பதற்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. ஏற்கனவே சொத்துக்கள் சம்மந்தமாக பாகவழக்கு நிலுவையில் உள்ள நிலையில் அதில் கண்ட சொத்துக்கள் சம்மந்தமாக தனியாக வழக்கு செய்து தொல்லை தந்துள்ளேன் என்றும், அந்த வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. ஏற்கனவே அந்த சொத்தில் அனுமதிபெற்று கட்டிடம் கட்டப்பட்டுவிட்டதால் தற்போது நான் கோரியுள்ள பரிகாரம் அற்றுபோய்விட்டது என்றால் சரியல்ல. மு.வ.எண்.68/2025 வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் கேட்டுக்கொண்டற்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.